உ

கடவுள் துணை.

ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் வள்ளியம்மையைச்

சிறையெடுத்த

கொப்பிப்பாட்டு.

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் வள்ளியம்மையைச்
சிறையெடுத்த

கொப்பிப் பாட்டு.

காப்பு வெண்பா.

வெள்ளைவிடையேறும் வேணியரனார்மகிழும்
கொள்ளுமுருகன்வள்ளிகொப்பிதனை-உள்ளமதில்
சிந்தித்துயானுரைக்கச் சித்திமுத்திதானளிக்குங்
கந்தருக்குமுன்பிறந்தோன் காப்பு.

கொப்பியள்ளோ-கொப்பியென்றுபாருங்கடி கோபளப்பெண்களே
நீங்கள் கொப்பியள்ளோ.

கொ ஆதிகணபதிதன் அடியிணையைநான்றொழுவேன் கொ
கொ ஆறுமுகவேலவரே ஆண்டவரேநான்சரணம்
கொ வாணிசரஸ்வதியே வாக்கருளவேணுமம்மா
கொ கந்தரின்மேல்கொப்பிபாட கனிவுடனே துணையிருப்பாய்
கொ வள்ளியின்மேல்கொப்பிபாட வந்துநீ துணையிருப்பாய்
கொ ஆதியிலோர்மறையவர் அன்புள்ளவிபுதையரை

கொ கந்தர்வவிபுதையரை கருதியுறவாடினரே ஈஸ்வரா.
கொ விபுதைவயற்றிலேதான் வீரியகர்ப்பந்தரித்து
கொ கோமளமயிலைப்போலே குமரியென்றுபெண்பிறந்து
கொ கந்தருக்குவென்றுசொல்லி கன்னியும்வளர்ந்தபின்பு
கொ வேலவரைக்கல்யாணம்செய்ய வீரியதபசிருந்தாள் ஈஸ்வரா
கொ தபசுசெய்யுங்குமரியக்கல் சண்முகனார்வந்துநின்று
கொ என்னவரம்வேணுமென்று இன்பமுடன்கேட்டார்
கொ எந்தனைக்கலியாணம்செய்து உந்தன்கூடச்சேருமென்றாள்
கொ அந்தவார்த்தைகேட்டுமுருவர் ஆயாசத்தைமனதிலெண்ணி
கொ நாயகிதெய்வானையர்க்கு நம்பிக்கைநான்செய்துவந்தேன்
கொ கந்தருவப்பெண்ணானதால் உந்தனைமணமேசெய்வேன்
கொ மான்வயிற்றிற்பிறந்தாயானல் மனம்புரிவனென்றுசொன்னார்
கொ உறுதிசொல்லிகுமரியர்க்கு உத்தமர்தணிகைச்சேர்ந்தார்
கொ குமரேசர்போனபின்பு குமறிதன்னுயிரைவிட்டாளீஸ்வரா
கொ அப்பொழுதுமாயவரும் ஆலோசனைமனதிலெண்ணி
கொ மாயவரும்மங்கையரும் மானுகவடிவங்கொண்டு
கொ பாரிலுள்ளோர்தான்புகழ பாங்குடன்மருவிருந்தார்
கொ மானின்வயிற்றிலேதான் மயிலனையுந்தானுதித்தாள்
கொ வள்ளிக்கொடியின்மீதில் வந்துபிறந்தபின்பு

கொ வேடுவர்களப்பொழுது வேட்டையாடிவருகையிலே
கொ கானகத்தில்வேடுவர்கள் கண்டார்கள்குழந்தைதன்னை
கொ மகாதேவரருளினலே மைந்தனிருக்குதென்று ஈஸ்வரா
கொ குழந்தையைத்தாமெடுத்து கொப்பெனவேயோடிவந்தார்
கொ மனைவியைத்தாமழைத்து மதலையைக்கைகொடுத்தார்
கொ கன்னியரைவாங்கிமாது கனிகையால்முத்தமிட்டு [போ
கொ வள்ளிக்கொடிமீதிருந்தமையால் வண்மையுடன்குழந்தைக்கப்
கொ வள்ளியென்றுபேர்கொடுத்து வளர்த்தார்குழந்தைதன்னை
கொ பன்னிருவபதுசென்று பருவபக்குவமானபின்பு
கொ கானகத்தினைப்புனத்தில் கன்னிஆயாலோட்டிருந்தாள்
கொ வள்ளிப்புனத்தருகே வந்தாரேநாரதர்தானும் ஈஸ்வரா
கொ பூவையழகைக்கண்டு பொற்படங்கள்தானெழுதி
கொ கானகப்புனத்தைவிட்டு கந்தருக்குமுன்னேவந்தார்
கொ பொற்படங்கொடுத்துவங்கு போயிவந்தசேதிசொன்னர்
கொ சேதிதனைகேட்டுமுருகர் சீக்கிரத்தில்தானெழுந்து
கொ மன்மதவேடனைப்போல் மால்மருகன்ரூபங்கொண்டார்
கொ தினைப்புனத்தில்வள்ளிபரை தேடிவந்தார்வேல்முருகர்
கொ வள்ளியரைக்கண்டுவேலர் துள்ளிப்போய்மூர்ச்சையானர்
கொ கலைகள்தெளிந்துமுருகர் கன்னியுடனே துரைப்பார்

கொ அகடானவார்த்தைகளை ஆண்டவனார்கூறலுற்றார்
கொ அந்தவார்த்தைகேட்டுவள்ளி அலறிபுலம்பலுற்றாள் ஈஸ்வரா
கொ வேடரானவேலவரும் வேறுவேஷங்கொண்டாரப்போ
கொ வளையல்காரசெட்டியைப்போல் வளையலென்றுகூறிவந்தார்
கொ வளையலென்றசத்தங்கேட்டு வள்ளியும்பரணிறங்கி
கொ தேனுக்கும்தினைமாவுக்கும் தேன்மொழிவளையல்கேட்டாள்
கொ மாணிக்கவளையல்தாரேன் மருவிருப்போம்வாடியென்றான்
கொ அகடானவார்த்தைகேட்டு அண்ணமாரைத்தானழைத்தாள்
கொ வள்ளியுடன்சத்தங்கேட்டு வனவேடரோடிவந்தார்
கொ வேடர்கள்வார்த்தைக்கண்டு வேங்கைமரமானார்வேலர்
கொ வேங்கைமரத்தைக்கண்டு வெட்டவந்தார்வேடுவர்கள்
கொ அண்ணமார்க்குமுன்னேவந்து அருங்கிளியுமேதுரைப்பாள்
கொ எந்தனுக்குநிழலாக விருக்கட்டுமண்ணாவேயென்றாள்
கொ வள்ளிவார்த்தைகேட்டுவேடர் வனந்தனிலேதானடந்தார்
கொ வேங்கைமரமானவேலர் விருத்தாப்பியசங்கமானார்
கொ தம்பிரானைக்கண்டுவேடர் தங்கைக்குத்துணையாமென்று
கொ தெளிந்தஜங்கமமொன்று தினைப்புனத்தில்கூட்டிவந்தார்
கொ வள்ளிக்குத்துணையாகவைத்து வந்துவிட்டார்கானகத்தில்
கொ கன்னியரைவசமாக்கக் கந்தருமனதிலெண்ணி ஈஸ்வரா

கொ தண்ணீர்வேணுமென்றுசொல்லி தம்பிரானுங்கேட்கலுற்றான்
கொ சுனையருகில்வள்ளிசென்றாள் துதித்தார்வேலர்விநாயகரை
கொ அண்ணுவேகணபதியே யானையாகவரவேணுமென்றார்
கொ மதயானைரூபங்கொண்டு வந்தாரேவிநாயகரும்
கொ ஆனையைக்கண்டுமேவள்ளி அலறியேஓடிவந்தாள் ஈஸ்வரா
கொ தம்பிரானேகாருமென்று தழுவியேகட்டிக்கொண்டாள்
கொ ஆனையைத்தானமர்த்தி ஆறுமுகம்வடிவுகொண்டார் ஈஸ்வரா
கொ ஆறுமுகத்தைக்கண்டு ஆனந்தங்கொண்டாளேவள்ளி
கொ சண்முகரும்வள்ளியரும் சந்தோஷங்களானபின்பு ஈஸ்வரா
கொ இப்போபோனால்வேலவரே எப்போவருவீரென்றாள்
கொ நாளையராத்திரிக்கு நலமுடனேவாரேனென்று
கொ வள்ளியர்க்குறுதிசொல்லி வந்தார்வேலர்வேடர்முன்னே
கொ அந்தணரைப்போலேவேலர் தந்திரபஞ்சாங்கம்சொன்னார்
கொ கந்தனென்றகன்னக்காரன் கன்னியரைக்கன்னமிட்டு
கொ வள்ளியரைக்கன்னமிட்டு கள்ளங்கொண்டுபோகப்போறான்
கொ வேடருக்குபஞ்சாங்கம்சொல்லி வேலவரும்போனபின்பு
கொ வள்ளியரைத்தானழைத்து வைத்தார்வேடர்குகைதனிலே
கொ அண்ணமாரெழுவர்களும் அன்புடனேகாத்திருந்தார்
கொ அந்திப்பொழுதுசென்று அர்த்தராத்திரியானபின்பு

கொ கண்ணபிடுங்கள்ளனைப்போல் கந்தரப்போருபங்கொண்டு
கொ வள்ளியரைக்கண்ணமிட வந்துநின்றார் குகையருகில்
கொ பஞ்சாக்ஷரம்உச்சரித்து பாங்குடனே தூவிவிட்டார்
கொ காவலிருந்தவர்கள் கடுகனவேமூர்ச்சையானார் ஈஸ்வரா
கொ கதவைப்பிளந்துவேலர் கன்னியரைக்கொண்டுவந்தார்
கொ வள்ளியைசிறையெடுத்து வாரார்தணிகைதேடி ஈஸ்வரா
கொ வெடியாக்குபந்தலிலே வேலவனார்போயமர்ந்தார்
கொ வனத்தில்மூர்ச்சைதெளிந்தவேடர் வள்ளியரைத்தேடியவர்
கொ வருகிறவழிதனிலே வந்தெதிர்த்தார்வேல்முருகர்
கொ கானகத்திலவேலவர் கனமூர்ச்சையாகிவிட்டார்
கொ அண்ணமாரைக்கண்டுவள்ளி அழுதுபுலம்பினபின்
கொ கந்தரைநோக்கியேவள்ளி கடுகவெழுப்புமென்றாள்
கொ விபூதியைத்தான்தெளித்து வேடரையெழுந்திரென்றார்
கொ வேலவர்கிருபையாலே வேடுவரெழுந்திருந்தார் ஈஸ்வரா
கொ ஆண்டவரைக்கண்டுவேடர் அடிவணங்கிதெண்டனிட்டார்
கொ தமையன்மாரெழுந்தபின்பு சண்முகனார்முன்னேவந்தார்
கொ எந்தனைக்கல்யாணம்நீரும் இன்பமுடன்செய்யுமென்றாள்
கொ கனதபசுசெய்தாயானால் கன்னியரேவந்துநானும்
கொ உந்தனைமணம்புரிந்து சொந்தமுடன்கூட்டிப்போரேன்

கொ வள்ளியர்க்குவார்த்தைசொல்லி வந்துவிட்டார்தணிகைதனில்
கொ கந்தரும்போனபிற்பாடு கனதபசுசெய்தாள்வள்ளி
கொ வள்ளிசெய்யுந்தபசருகில் வந்தார்கள்தேவரெல்லவரும்
கொ தபசுசெய்தகாரியமேன் தையலரேகூறுமென்றார்
கொ முருகர்வந்துஎந்தனையும் முகூர்த்தஞ்செய்யவேணுமென்றார்
கொ கன்னிவார்த்தைகேட்டுதேவர் கந்தருடனேதுரைப்பார்
கொ மான்வயிற்றிற்பிறந்ததினால் மணம்புரியும்முருகாவென்றார்
கொ தெய்வயானையறியாமல் திருமணஞ்செய்யேனென்றார்
கொ அந்தவார்த்தைகேட்டுவேலர் அனுப்பினார்நாரதனை
கொ நாரதர்தணிகைவந்து நலமாய்தெய்வானையர்க்கு
கொ தேறுதலைகள்சொல்லி திருப்பிவந்தார்முருகரண்டை
கொ முருகருக்கும்வள்ளியர்க்கும் முகூர்த்தமுஞ்செய்துவைத்து
கொ திருக்கலியாணம்செய்து தேவர்களும்போனபின்பு
கொ வள்ளிதெய்வானையரும் வடிவேல்முருகருமாய்
கொ வாழ்மயிலிலேறியல்லோ வந்தாரேதணிகைதனில்
கொ தணிகைமாமலையில்வந்து சம்பிரமுடன்வாழ்ந்திருந்தார்
கொ இதைப்பாடிபடித்தவரும் பாங்காய்கொப்பியடித்தவரும்
கொ ஆல்போல்தழைத்தல்லவோ அறுகுபோல்வேரோடிவாழ்வார்

வள்ளியம்மன் கொப்பிப்பாட்டு முற்றிற்று.